www.StudyGuideIndia.com

7078

Register Number | | | | | |

**Part III**

# கணக்குப்பதிவியல் / ACCOUNTANCY

( Tamil Version )

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 200

## பகுதி - அ

( மதிப்பெண்கள் : 30 × 1 = 30 )

*குறிப்பு :* எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

I. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. கொடுபட வேண்டிய செலவுகள் இருப்பு நிலைக்குறிப்பில் ...................... பக்கத்தில் தோன்றும்.

2. இருப்புநிலைக் குறிப்பில் வாரா ஐயக்கடன் ஒதுக்கு ...................... லிருந்து கழித்துக் காட்டுதல் வேண்டும்.

3. 31. 03. 2008 அன்றைய இருப்பாய்வின்படி முதல் ரூ. 4,00,000 ஆகும். ஆண்டுக்கு 6% வீதம் முதல் மீதான வட்டி ...................... ஆகும்.

4. நிலை அறிக்கை முறை ...................... முறை எனவும் அழைக்கப்படும்.

5. ஒரு தொழில் நிறுவனத்தின் முதல் ரூ. 1,30,000. அதனுடைய பொறுப்புகள் ரூ. 50,000. தொழிலில் அதனுடைய சொத்துக்கள் ...................... ஆகும்.

[ Turn over

www.StudyGuideIndia.com

6. குத்தகைகள் மீது தேய்மானம் கணக்கிட ...................... முறை பயன்படுத்தப்படுகிறது.

7. இயந்திரம் ஒன்றின் விற்பனை விலை ரூ. 1,50,000. அதை விற்றதில் ஏற்பட்ட இலாபம், ரூ. 15,000 எனில் அதன் ஏட்டு மதிப்பு ரூ. ...................... ஆகும்.

8. ...................... விகிதங்கள் ஒரு நிறுவனத்தின் நடப்பு நிலுவைகளைச் செலுத்தும் திறனை அளவிடுகிறது.

9. மொத்த விற்பனை ரூ. 2,00,000 ஆக உள்ள போது ரொக்க விற்பனை ரூ. 85,000 எனில் கடன் விற்பனை ரூ. ...................... ஆகும்.

10. ஒரு மாதத்தின் இறுதி ரொக்க இருப்பு அடுத்த மாதத்தின் ...................... இருப்பாகும்.

11. சாதாரண இலாபத்தைவிட, சராசரி இலாப மிகுதிக்கு ...................... என்று பெயர்.

12. பதிவு பெறா பொறுப்பை ஏடுகளில் கொணர்வது ...................... இனமாகும்.

13. விலகலின் போது, தொழிலின் மறுமதிப்பீட்டு இலாபம் ...................... கூட்டாளிகளாலும் பகிரப்படும்.

14. பெயரளவு முதல் நிறுமத்தின் ...................... குறிப்பிடப்பட்டிருக்கும்.

15. ஒரு நிறுமம் ஒன்று ரூ. 10 மதிப்புடைய 1,00,000 பங்குகளை பொதுமக்களுக்கு வெளியிட்டது. அவற்றில் 75,000 பங்குகளை மட்டுமே பொதுமக்கள் வாங்க ஒப்புக் கொண்டால், அந்நிறுமத்தின் ஒப்பாத முதல் ரூ. ...................... ஆகும்.

www.StudyGuideIndia.com

II. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :

16. கூடியுள்ள வட்டி ...................... ஆகும்.

அ) வருமானம்

ஆ) சொத்து

இ) பொறுப்பு.

17. இருப்பாய்வின்படி நிலம் மற்றும் கட்டிடத்தின் மதிப்பு ரூ. 8,00,000. ஆண்டு இறுதியில் தேய்மானம் 10% நீக்கப்பட்டது எனில் நிலம் மற்றும் கட்டிடத்தின் மதிப்பு

அ) ரூ. 8,80,000

ஆ) ரூ. 7,20,000

இ) ரூ. 80,000.

18. கடன் கொள்முதலை அறிய உதவும் கணக்கு

அ) பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு

ஆ) மொத்த கடனாளிகள் கணக்கு

இ) மொத்த கடனீந்தோர் கணக்கு.

www.StudyGuideIndia.com

19. 2007 ஏப்ரல் 1 அன்று பற்பல கடனாளிகள் ரூ. 80,000. 2008 மார்ச் 31 அன்று பற்பல கடனாளிகள் ரூ. 1,00,000. அவ்வாண்டில் பற்பல கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் ரூ. 1,50,000 எனில் அவ்வாண்டின் கடன் விற்பனை

அ) ரூ. 1,80,000

ஆ) ரூ. 1,70,000

இ) ரூ. 2,50,000.

20. விற்பனை விலை சொத்தின் ஏட்டு மதிப்பை விடக் குறைவாக இருந்தால் அது ஒரு ........................ ஆகும்.

அ) நட்டம்

ஆ) மூலதன இலாபம்

இ) செலவு.

21. ரூ. 15,000 மீது ஆண்டுக்கு 10% குறைந்து செல் மதிப்பு முறையில் தேய்மானம் நீக்கப்பட்டால், முதல் மூன்று ஆண்டுகளுக்கு நீக்கப்படும் தேய்மானத் தொகையின் மொத்தம்

அ) ரூ. 4,635

ஆ) ரூ. 4,065

இ) ரூ. 4,506.

22. ........................ என்பது எளிதாக ரொக்கமாகக் கூடிய சொத்துக்கள் ஆகும்.

அ) நிலைச் சொத்துக்கள்

ஆ) புலனாகா சொத்துக்கள்

இ) நடப்பு சொத்துக்கள்.

www.StudyGuideIndia.com

23. அனைத்து இலாப விகிதங்களும் ...................... ஆகக் கொடுக்கப்படும்.

அ) விகிதாச்சாரம்

ஆ) மடங்கு

இ) சதவீதம்.

24. ரொக்க திட்டப்பட்டியல் கையாள்வது

அ) திட்டமிடப்பட்ட ரொக்க பெறுதல்கள்

ஆ) திட்டமிடப்பட்ட ரொக்க செலுத்தல்கள்

இ) திட்டமிடப்பட்ட ரொக்க பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள்.

25. மாறுபடும் முதல் முறையில், கூட்டாளிகளுக்கு உரிய இலாபம் அவர்களின் ...................... கணக்குகளுக்கு மாற்றப்படும்.

அ) முதல்

ஆ) நடப்பு

இ) எடுப்பு.

26. தியாக விகிதம் கணக்கிடப்படுவது

அ) கூட்டாண்மைக் கலைப்பில்

ஆ) கூட்டாளி சேர்க்கப்படுகையில்

இ) கூட்டாளி விலகலில்.



www.StudyGuideIndia.com

27. நற்பெயர் ஒரு ........................ சொத்து.

அ) புலனாகும்

ஆ) புலனாகா

இ) கற்பனை.

28. ஒரு நிறுமம் விடுக்கக்கூடிய அதிகபட்ச அழைப்புகளின் எண்ணிக்கை

அ) ஒன்றாகும்

ஆ) இரண்டாகும்

இ) மூன்றாகும்.

29. பங்குகளை நிறுமம் ஒறுப்பிழப்பு செய்யும் போது, அந்நிறுமத்தின் பங்கு முதல் ........................ .

அ) அதே நிலையில் இருக்கும்

ஆ) குறையும்

இ) அதிகரிக்கும்.

30. ஒறுப்பிழப்பு கணக்கில் வரவு வைக்கப்பட்ட தொகை ரூ. 6,000. ஒறுப்பிழப்பு செய்த பங்குகளை மறு வெளியீடு செய்த வகையில் நட்டம் ரூ. 1,500 எனில் முதலின காப்பு ரூ. ........................ .

அ) ரூ. 4,500

ஆ) ரூ. 1,500

இ) ரூ. 7,500.

www.StudyGuideIndia.com

## பகுதி - ஆ

( மதிப்பெண்கள் : 10 × 5 = 50 )

குறிப்புகள் : i) எவையேனும் **பத்து** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ii) கோட்பாடு சார்ந்த வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் 50 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

31. முன்கூட்டிப் பெற்ற வருமானம் என்றால் என்ன ?

32. ஒற்றைப்பதிவு முறைக்கு வரைவிலக்கணம் தருக.

33. ஆண்டுத்தொகை முறையில் தேய்மானம் கணக்கிடுதல் என்றால் என்ன ?

34. நடப்பு விகிதம் பற்றி குறிப்பு வரைக.

35. ரொக்கத் திட்டப்பட்டியல் தயாரிப்பதில் உள்ள நிலைகளை விளக்குக.

36. மாறுபடும் முதல் முறை என்றால் என்ன ?

37. அழைப்பு முன்பணம் என்றால் என்ன ?

38. வாராக்கடன் ரூ. 5,000 போக்கெழுதியதற்கு சரிகட்டுப் பதிவு மற்றும் மாற்றுப் பதிவு தருக.

39. கீழ்க்கண்ட விவரங்களைக் கொண்டு நிறுவனத்தின் இலாபம் அல்லது நட்டம் கண்டறிக :

| | ரூ. |
|---|---|
| தொடக்க முதல் | 1,40,000 |
| இறுதி முதல் | 1,50,000 |
| கூடுதல் முதல் | 35,000 |
| எடுப்புகள் | 10,000 |



www.StudyGuideIndia.com

40. திருவாளர்கள் விக்ரம் & கோ ரூ. 5,00,000 மதிப்புள்ள பொறிவகை ஒன்று வாங்கியது. அச்சொத்தின் மீது ஆண்டுதோறும் நேர்கோட்டு முறையில் தேய்மானம் அனுமதித்தது. அப்பொறி வகையின் பயனளிக்கும் காலம் 10 வருடங்கள். பயனற்ற நிலையில் அதன் இறுதி மதிப்பு ரூ. 50,000 எனில் தேய்மான விகிதத்தை கணக்கிடுக.

41. கீழ்க்கண்ட விவரங்களைக் கொண்டு முதல்-விற்பனை விகிதம் காண்க.

| | ரூ. |
|---|---|
| விற்பனை | 3,75,000 |
| விற்பனைத் திருப்பம் | 25,000 |
| சாதாரணப் பங்குமுதல் | 1,00,000 |
| நீண்ட காலக் கடன் | 50,000 |
| காப்புகள் | 25,000 |

42. நற்பெயரின் மதிப்பு கடந்த ஐந்து ஆண்டுகளின் சராசரி இலாபத்தில் மூன்று ஆண்டு கொள்முதல் எனக் கொண்டு கணக்கிடுக. கடந்த ஐந்து ஆண்டுகளின் இலாபங்கள் :

| | ரூ. |
|---|---|
| 2005 | 20,000 |
| 2006 | 24,000 |
| 2007 | 36,000 |
| 2008 | 19,000 |
| 2009 | 26,000 |

43. ரொக்க செலுத்தல்களுக்கு எவையேனும் ஐந்து எடுத்துக்காட்டுகள் தருக.

44. குளோபல் வரையறு நிறுமம் ரூ. 100 வீதம் 10,000 பங்குகளை 10% தள்ளுபடியில் வெளியிட்டது. குறிப்பேட்டுப் பதிவினைத் தருக.

www.StudyGuideIndia.com

## பகுதி - இ

( மதிப்பெண்கள் : 5 × 12 = 60 )

*குறிப்புகள் :* i) ஏதேனும் **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்கவும். இவற்றுள் **45**-வது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்.

ii) கோட்பாடு சார்ந்த வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் 150 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

45. அ) 31. 03. 2007 அன்றைய இருப்பாய்வின் படி

பற்பல கடனாளிகள் ரூ. 78,000

சரிக்கட்டுதல்கள் :

i) ரூ. 8,000 வாராக்கடன் போக்கெழுதுக.

ii) கடனாளிகள் மீது 5% வாரா ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்குக.

iii) கடனாளிகள் மீது 2% தள்ளுபடி ஒதுக்கு உருவாக்குக.

சரிக்கட்டுப்பதிவுகள் தந்து, இவ்விவரங்கள் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டுக.

*அல்லது*

ஆ) திரு. அன்வர் என்பவர் தனது ஏடுகளை முழுமை பெறா ஒற்றைப் பதிவு முறையில் பராமரித்து வருகிறார். 01. 04. 2006 மற்றும் 31. 03. 2007 ஆகிய நாட்களில் அவரது சொத்துக்களும், பொறுப்புக்களும் கீழ்கண்டவாறு இருந்தன.

| | **01. 04. 2006** | **31. 03. 2007** |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| கையில் ரொக்கம் | 5,000 | 10,000 |
| பற்பல கடனாளிகள் | 70,000 | 85,000 |
| முதலீடுகள் | 30,000 | 30,000 |
| அறைகலன் | 10,000 | 10,000 |
| பற்பல கடனீந்தோர் | 40,000 | 50,000 |
| சரக்கிருப்பு | 55,000 | 75,000 |

அவர் அவ்வாண்டில் ரூ. 30,000 கூடுதல் முதல் இட்டார். அவர் தனது சொந்த செலவிற்காக ரூ. 50,000 திரும்ப எடுத்துக் கொண்டார். 2006-07 ஆம் ஆண்டிற்கான அவரது இலாபம் அல்லது நட்டம் கண்டறிக.



www.StudyGuideIndia.com

46. தேய்மானத்திற்கு வரைவிலக்கணம் தருக. தேய்மானம் நீக்க வேண்டியதன் தேவைகள் யாவை ?

47. ரொக்கத் திட்டப் பட்டியலின் தன்மைகள் மற்றும் நன்மைகளை விளக்குக.

48. தியாக விகிதத்திற்கும், ஆதாய விகிதத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை ?

49. அருள் & கோ 01. 04. 2005 அன்று ரூ. 5,00,000 மதிப்புள்ள இயந்திரம் ஒன்றை வாங்கியது. மூன்று ஆண்டுகள் பயன்படுத்தப்பட்ட பிறகு அவ்வியந்திரம் ரூ. 3,50,000-க்கு விற்கப்பட்டது. ஆண்டு தோறும் 10% குறைந்து செல் மதிப்பு முறையில் தேய்மானம் நீக்கப்பட்டது. ஆண்டு தோறும் கணக்குகள் மார்ச் 31-ல் முடிக்கப் பெறுகின்றன. இயந்திரக் கணக்கு மற்றும் தேய்மானக் கணக்கு மூன்று ஆண்டுகளுக்கு தயார் செய்க.

50. கீழ்காணும் விவரங்களைக் கொண்டு மொத்த இலாப விகிதம், நிகர இலாப விகிதம், சரக்கிருப்பு விற்பனை விகதம் ஆகியவற்றைக் கணக்கிடுக.

| | ரூ. |
|---|---|
| விற்பனை | 1,50,000 |
| விற்ற பொருளின் அடக்கவிலை | 1,20,000 |
| தொடக்கச் சரக்கிருப்பு | 29,000 |
| இறுதிச் சரக்கிருப்பு | 31,000 |
| நிகர இலாபம் | 15,000 |

www.StudyGuideIndia.com

51. அமர், அக்பர் என்ற கூட்டாளிகள் 3 : 2 என்ற விகிதத்தில் இலாப நஷ்டங்களை பகிர்ந்து வருகின்றனர். 2004, ஏப்ரல் 1 அன்று அவர்களின் முதல் முறையே ரூ. 1,50,000 மற்றும் ரூ. 1,00,000. பின்வரும் சரிக்கட்டுதல்களுக்கு முன் 2005, மார்ச் 31-ம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான நிகர இலாபம் ரூ. 70,000. அமர், அக்பர் இருவரும் முறையே ரூ. 15,000 மற்றும் ரூ. 10,000 தங்களது சொந்த உபயோகத்திற்காக திரும்ப எடுத்தனர்.

கூட்டாண்மை ஒப்பாவனம் கீழ்காண்பனவற்றிற்கு வகை செய்கிறது.

i) முதல் மீது வட்டி ஆண்டுக்கு 6%

ii) எடுப்புகள் மீது வட்டி வீதம் ( ஆண்டுக்கு 8% வீதம் ) அமர் ரூ. 600, அக்பர் ரூ. 400 ஆகும்.

iii) அமர், அக்பர் இருவரும் முறையே ஆண்டுக்கு ரூ. 10,000 ஊதியம் பெறுகின்றனர்.

iv) அமர் ரூ. 3,600 கழிவு பெறுகிறார்.

இலாப நட்டப் பகிர்வு கணக்கையும், கூட்டாளிகளின் முதல் கணக்குகளையும் காட்டுக.

52. அசோக் வரையறு நிறுமம் முற்றும் அழைக்கப்பெற்ற ரூ. 10 முகமதிப்புடைய 2,000 பங்குகளை இறுதி அழைப்பு ரூ. 3 செலுத்தாத காரணத்தினால் ஒறுப்பிழப்பு செய்தனர். இதில் 500 பங்குகளை பங்கொன்றுக்கு ரூ. 7 வீதம் முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளாக மறு வெளியீடு செய்தது.

தேவையான குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து, பங்கு ஒறுப்பிழப்புக் கணக்கு மற்றும் முதலினக் காப்பு கணக்கு தயார் செய்க.



www.StudyGuideIndia.com

54. திரு. இம்ரான் என்பவரது கீழ்கண்ட இருப்பாய்விலிருந்து 31. 03. 2005 ஆம் நாளோடு முடிவுறும் ஆண்டிற்கான வியாபார, இலாப நட்டக் கணக்கையும், இருப்பு நிலைக் குறிப்பையும் தயார் செய்க.

**2005, மார்ச் 31 ஆம் நாளைய இருப்பாய்வு**

| பற்று இருப்புகள் | ரூ. | வரவு இருப்புகள் | ரூ. |
|---|---|---|---|
| கொள்முதல் | 1,50,000 | முதல் | 3,00,000 |
| பற்பல கடனாளிகள் | 80,000 | பற்பல கடனீந்தோர் | 53,000 |
| முதலீடுகள் | 1,20,000 | விற்பனை | 2,20,000 |
| வாடகை | 15,000 | கழிவு பெற்றது | 7,000 |
| உள்தூக்கு கூலி | 10,000 | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 20,000 |
| சம்பளம் | 20,000 | | |
| பொதுச் செலவுகள் | 10,000 | | |
| ரொக்கம் | 30,000 | | |
| தொடக்க சரக்கிருப்பு | 75,000 | | |
| இயந்திரம் | 60,000 | | |
| எடுப்புகள் | 30,000 | | |
| | 6,00,000 | | 6,00,000 |

*சரிக்கட்டுதல்கள் :*

i) இறுதிச் சரக்கிருப்பு ரூ. 1,00,000

ii) கொடுபட வேண்டிய வாடகை ரூ. 2,000

iii) முதல் மீது வட்டி 6% அனுமதிக்க

iv) முன்கூட்டிப் பெற்ற கழிவு ரூ. 1,000

v) இயந்திரம் மீது ஆண்டுக்கு 10% தேய்மானம் நீக்குக.

www.StudyGuideIndia.com

55. பின்வரும் இருப்புநிலைக் குறிப்பிலிருந்து பின்வருவனவற்றைக் கணக்கிடுக :

i) நடப்பு விகிதம்

ii) நீர்மை விகிதம்

iii) துல்லிய நீர்மை விகிதம்

iv) உரிமையாளர் விகிதம்.

**2007 மார்ச் 31 ம் நாளைய இருப்பு நிலைக் குறிப்பு**

| *பொறுப்புகள்* | *ரூ.* | *சொத்துக்கள்* | *ரூ.* |
|---|---|---|---|
| சாதாரண பங்குமுதல் | 1,00,000 | இயந்திரம் | 90,000 |
| முன்னுரிமை பங்கு முதல் | 25,000 | அறை கலன் | 30,000 |
| காப்புகள் | 25,000 | சரக்கிருப்பு | 20,000 |
| கடனீட்டுப் பத்திரம் | 35,000 | பற்பல கடனாளிகள் | 35,000 |
| கடனீந்தோர் | 15,000 | ரொக்கம் | 10,000 |
| வங்கி மேல்வரைப்பற்று | 20,000 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 5,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 5,000 | குறுகிய கால முதலீடுகள் | 10,000 |
| | | நற்பெயர் | 25,000 |
| | 2,25,000 | | 2,25,000 |

56. கீழ்க்காணும் விவரங்களிலிருந்து 2009 ஜூன், ஜூலை, மற்றும் ஆகஸ்ட் மாதங்களுக்கான ரொக்கத் திட்டப்பட்டியல் தயாரிக்க :

| *மாதம்* | *கடன் விற்பனை (ரூ.)* | *கடன் கொள்முதல் (ரூ.)* | *கூலி (ரூ.)* |
|---|---|---|---|
| 2009 ஏப்ரல் | 2,50,000 | 1,80,000 | 25,000 |
| " மே | 2,65,000 | 1,25,000 | 10,000 |
| " ஜூன் | 3,25,000 | 1,75,000 | 25,000 |
| " ஜூலை | 3,75,000 | 1,90,000 | 15,000 |
| " ஆகஸ்ட் | 3,50,000 | 2,25,000 | 20,000 |

*கூடுதல் தகவல்கள் :*

i) 2009 ஜூன் 1-ம் நாளைய ரொக்க இருப்பு ரூ. 1,20,000

ii) வாடிக்கையாளருக்கு அளித்த கடனின் காலம் ஒரு மாதம்

iii) சரக்களித்தோர் அனுமதித்த கடனின் காலம் இரண்டு மாதங்கள்

iv) கூலி ஒரு மாதம் கடந்த பின் செலுத்தப்படுகிறது

v) ஜூலை மாதத்தில் ரூ. 40,000 க்கு இயந்திரம் விற்கப்படுதல்.



www.StudyGuideIndia.com

57. செண்பகம் வரையறு நிறுமம் ரூ. 10 மதிப்புள்ள 2,00,000 பங்குகளை, பங்கொன்றுக்கு ரூ. 2 முனைமத்தில் வெளியிட்டது.

| | |
|---|---|
| விண்ணப்பத்தின்போது | ரூ. 2 |
| ஒதுக்கீட்டின்போது | ரூ. 5 ( ரூ. 2 முனைமம் சேர்த்து ) |
| முதல் அழைப்பின் போது | ரூ. 3 |
| இறுதி அழைப்பின் போது | ரூ. 2 |

அனைத்து பங்குகளும் முழுமையாக ஒப்பப்பட்டன. இரு அழைப்புகளும் விடுக்கப்பட்டு தொகைகள் அனைத்தும் முழுமையாகப் பெறப்பட்டன.

குறிப்பேட்டுப் பதிவுகள் தருக. மேலும் வங்கிக் கணக்கு, பங்கு முதல் கணக்கு, பத்திர முனைமக் கணக்கு மற்றும் இருப்புநிலைக் குறிப்பு தயார் செய்க.

www.StudyGuideIndia.com